# ஆகஸ்ட்- 03 - வியாழன்

### ஏனெனில், உமது பேரன்பு உயிரினும் மேலானது: திபா. 63:3

## முதல் வாசகம் : விடுதலைப் பயணம்40:16–21,34 – 38

மோசே அவ்வாறே செய்தார். ஆண்டவர் கட்டளையிட்ட படியெல்லாம் அவர் செயல்பட்டார்.இரண்டாம் ஆண்டில், முதல் மாதம், முதல் தேதியன்று திருஉறைவிடம் எழுப்பப்பட்டது. மோசே திருஉறைவிடத்தை எழுப்பினார் பாதப்பொருத்துகளை வைத்து அதன்மேல் சட்டங்களைப் பொருத்தினார். குறுக்குச் சட்டங்களையும் பொருத்தினார் தூண்களையும் நிறுத்தினார்.திரு உறைவிடத்தின்மேல் அவர் கூடாரத்தை விரித்தார் அதற்குமேல் கூடார மேல்விரிப்பை அமைத்தார். இதுவும் ஆண்டவர் மோசேக்குக் கட்டளையிட்டபடியே செய்யப்பட்டது.உடன்படிக்கைப் பலகையை அவர் எடுத்து, அதைப் பேழையில் வைத்தார். தண்டுகளைப் பேழையில் செருகினார். இரக்கத்தின் இருக்கையைப் பேழையின்மேல் வைத்தார்.திருஉறைவிடத்தினுள் பேழை எடுத்துச் செல்லப்பட்டது. திருத்தூயகத்திரை தொங்கவிடப்பட்டு, உடன்படிக்கைப் பேழை மறைக்கப்பட்டது. இதையும் ஆண்டவர் கட்டளையிட்டபடியே மோசே செய்தார். பின்பு, மேகம் சந்திப்புக்கூடாரத்தை மூடிற்று. ஆண்டவரின் மாட்சி திருஉறைவிடத்தை நிரப்பிற்று.சந்திப்புக்கூடாரத்தின் மேலே மேகம் நின்றிருந்ததாலும், ஆண்டவரின் மாட்சி திருஉறைவிடத்தை நிரப்பியதாலும் மோசே உள்ளே நுழைய முடியாமல் போயிற்று.இஸ்ரயேல் மக்கள் தங்கள் பயணத்தின் ஒவ்வொரு கட்டத்திலும், மேகம் திரு உறைவிடத்தைவிட்டு எழும்பும் போதெல்லாம் புறப்பட்டுச் செல்வார்கள்.மேகம் எழும்பாதிருக்கும் போதோ, அது மேலே எழும்பும் நாள்வரை, அவர்கள் புறப்பட மாட்டார்கள்.ஏனெனில் பயணத்தின் ஒவ்வொரு கட்டத்திலும் திருஉறைவிடத்தின்மேல் பகலில் ஆண்டவரின் மேகம் இருப்பதையும், இரவிலோ அதில் நெருப்பு இருப்பதையும் இஸ்ரயேல் வீட்டார் காண்பார்கள்.

**பதில்பாடல் :** ஆண்டவரே உம் உறைவிடம் எத்துணை மகத்துவமானது

## நற்செய்தி : மத்தேயு 13 : 47 - 53

அக்காலத்தில் இயேசு மக்களை நோக்கிக் கூறியதாவது:” விண்ணரசு கடலில் வீசப்பட்டு எல்லா வகையான மீன்களையும் வாரிக் கொண்டுவரும் வலைக்கு ஒப்பாகும்.வலை நிறைந்ததும் அதை இழுத்துக்கொண்டு போய்க்கரையில் உட்கார்ந்து நல்லவற்றைக் கூடைகளில் சேர்த்து வைப்பர் கெட்டவற்றை வெளியே எறிவர்.இவ்வாறே உலக முடிவிலும் நிகழும். வானதூதர் சென்று நேர்மையாளரிடையேயிருந்து தீயோரைப் பிரிப்பர். பின் அவர்களைத் தீச்சூளையில் தள்ளுவர். அங்கே அழுகையும் அங்கலாய்ப்பும் இருக்கும்.””இவற்றையெல்லாம் புரிந்து கொண்டீர்களா?” என்று இயேசு கேட்க, அவர்கள், ”ஆம்” என்றார்கள்.பின்பு அவர், ”ஆகையால் விண்ணரசு பற்றிக் கற்றுக்கொண்ட எல்லா மறைநூல் அறிஞரும் தம் கருவூலத்திலிருந்து புதியவற்றையும் பழையவற்றையும் வெளிக்கொணரும் வீட்டு உரிமையாளரைப்போல் இருக்கின்றனர்” என்று அவர்களிடம் கூறினார்.இவ்வுவமைகளை இயேசு சொல்லி முடித்த பின்பு அவ்விடத்தை விட்டுச் சென்றார்’’ என்றார்.

**தியானம்:** இறைவன் குடிகொண்டிருக்கும் பரிசுத்தமான ஆலயத்திற்கு செல்வதற்கு நாங்கள் அவர் எமக்குக் கொடுத்த கட்டளைகளை கடைப்பிடித்து வாழும் பொழுது நாங்கள் செய்யும் ஒவ்வொரு செயல்களும் அவருக்கு ஏற்றவையாக அமையும். அவரும் நிறைவான ஆசீர்வாதத்தை எமக்கு அருள்வார் என்று இன்றைய வாசகங்கள் தெளிவுபடுத்தகின்றது. ஆண்டவர் மோசேயிடம் சந்திப்புக்கூடார உறைவிடத்தை அமைப்பதற்கு ஒவ்வொரு மாதமும், நாட்களும் தனித்தனியே ஒவவொன்றையும் செய்து முடிக்குமாறு கூறினார். அவரும் அவர் கூறியபடியே யாவற்றையும் செய்து முடித்தார். நாங்கள் அவர் குடிகொள்ளும் ஆலயமாக இருக்கின்றோம். அவர் எங்கள் உளள்த்தில் குடிகொள்ள தயாராக இருக்கின்றோமா? என்று சிந்திக்க வேண்டியவர்களாக உள்ளோம். ஏனெனில் சாத்தானானவன் பலவித அசுத்த காரியங்களை எங்களில் உட்புகுத்தி இறைவனின் பரிசுத்ததிலிருந்து பிரித்து விடுகின்றான். இதற்கு காரணம் அவரது கட்டளைகளைக் கடைப்பிடிக்காததே. மோசே இறைவன் அழைப்பிற்கு செவிகொடுத்து அதன்படி யாவற்றையும் செய்து முடித்தார். நற்செய்தியில் கூறப்பட்டது போன்று எமது வாழ்க்கையில் நல்ல நிலத்தில் விதைக்கப்பட்ட விதைகள் முளைத்து வளரும் பொழுது எமது பாவங்களினால் அவற்றிக்கிடையில் வளரும் களைகளாக நாங்கள் இருப்போமானால், இறுதிக்கால வேளையில் களைகள் எவ்வாறு வெட்டப்பட்டு சுட்டெரிக்கப்படுகின்றதோ அதே போன்று நாங்களும் பிரித்தெடுக்கப்பட்டு நரகபாதாளத்தில் தள்ளப்படுவோம். எனவே இதை உணர்ந்தவர்களாக அவர் குரலுக்கு செவிகொடுத்து நேரிய வழி நடக்க எங்களை தயார் படுத்தவோம்.